செய்தி வெளியீடு எண்:866 நாள்:11.10.2021

**<u>செய்தி வெளியீடு</u>**

**தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய 25.84 டி.எம்.சி தண்ணீரை கர்நாடகா உடனடியாக வழங்க வேண்டும்**

**காவிரி நீர் மேலாண்மை ஆணைய கூட்டத்தை விரைவில் கூட்ட வேண்டும் புதுடெல்லியில் இன்று நடைபெற்ற காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு கூட்டத்தில்**

**தமிழ்நாடு பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர்**

**முனைவர். சந்தீப் சக்சேனா. இ.ஆ.ப., அவர்கள் வலியுறுத்தல்**

காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுவின் 53வது கூட்டம் இன்று (11.10.2021) புதுடெல்லியில் அதன் தலைவர் திரு. நவீன் குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர்.சந்தீப் சக்சேனா.இ.ஆ.ப., கர்நாடக மாநில நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ராகேஷ் சிங். இ.ஆ.ப., மற்றும் குழுவின் உறுப்பினர்கள் தமிழ்நாடு சார்பில் காவிரி தொழில்நுட்பக் குழு தலைவர் திரு.ஆர்.சுப்ரமணியன், நீர்வளத்துறை திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் திரு. எஸ். இராமமூர்த்தி, கர்நாடக மாநில காவிரி நீர்வாரி நிகரம் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு. கே. ஜெயபிரகாஷ், கேரளா நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர் திரு. அலெக்ஸ் வர்கீஸ், பாண்டிச்சேரி பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் திரு. வி. சத்யமூர்த்தி, மத்திய நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர் திரு. சுஷில் குமார் மற்றும் நான்கு மாநில அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் அவர்கள் தற்போது மேட்டூர் அணையில் நீர்வரத்து மற்றும் நீர் இருப்பு விவரங்களை தெரிவித்ததுடன், தமிழ்நாட்டின் நீர்த் தேவையைக் கருதி உடனடியாக பிலிகுண்டுலுவில் உச்ச நீதி மன்ற ஆணையின் படி நிலுவையில் உள்ள நீரையும் மற்றும் மாதாந்திரவாரியான நீரையும் உடனடியாக கர்நாடக அரசு அளிக்க வலியுறுத்தினார்.

உச்ச நீதி மன்றத் தீர்ப்பின்படி தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய தண்ணீரை கர்நாடக மாநிலம் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டும் என கடந்த இரு காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் உத்தரவிட்டும் கர்நாடக மாநிலம் திறந்துவிடவில்லை என தெரிவிக்கப்பட்டது. மேலும் இன்றைய நாள் வரை வழங்காமல் நிலுவையிலுள்ள (10.10.2021 வரை) 25.84 டி.எம்.சி. நீரை உடனடியாக தமிழ்நாட்டிற்கு கர்நாடகா வழங்கிட வேண்டும் என தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். சந்தீப் சக்சேனா. இ.ஆ.ப., அவர்கள் கூட்டத்தில் வலியுறுத்தினார். மேலும் காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தை முன் கூட்டியே விரைவாக கூட்டப்பட வேண்டும் என தமிழ்நாடு சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

விவாதத்திற்குப் பிறகு காவிரி நீர் முறைப்படுத்தும் குழு, கர்நாடகா நிலுவையில் உள்ள 25.84 டி.எம்.சி. நீரையும் இம்மாதம் 30ஆம் தேதிக்குள் அளிக்க வேண்டிய 14 டி.எம்.சி. நீரையும் பிலிகுண்டுலுவில் அளிக்க வலியுறுத்தப்பட்டது. காவிரி நதி நீர் மேலாண்மை ஆணைய கூட்டத்தை அடுத்த 10 தினங்களுக்குள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9